Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Nature in the Poetic Anthology *Yenathu Karupu Petti*

**P.Vijayalakshmi**, Research Scholar, Department of Tamil, S.T.Hindu College Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-5590-9479**
**I. Dr R.Sorna Bamila,** AssistantProfessor, Department of Tamil, S.T.Hindu College Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-3677-4644**
**DOI: 10.5281/zenodo.6622683**

## Abstract

*Even though literary trends and methods have been changed, poets have never changed the theme of glorifying nature. In evincing the glory of nature Thabu Sankar registers the immanence of nature in his poetic anthology "Enathu Karuppu Petti" (My Black Box). He has designed his technique as has been speaking to nature and nature has been talking to him. It seems novel in approach. This article decodes the novel technique employed by the writer.*

**Keywords:** Natural, Natural Speaking, Thabu Sankar, Poems.

## References

[1] Arokiya sami.R. *Purananooru*, New centuary House (P)Lit, Chennai–6000098, 2007.
[2] Thaboo Shankar. *Yenathu Karupu Petti*, Vijaya Pathipagam, Coimbatore, 2000.
[3] Bharathithasan. *Azhagin Siripu*, Free Tamil Ebook.com
[4] Vikramathithan. *Sudalaimadan Varai*, Santhiya Edition, Chennai – 600083, 2003.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# *எனது கறுப்புப் பெட்டி* கவிதை நூலில் இயற்கைப் பதிவுகள்

**பா. விஜயலெட்சுமி,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்க்கலைஆய்வகம்,
தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-5590-9479
**முனைவர் இரா. சொர்ணபமிலா,** உதவிப்பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம்,
தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-3677-4644
DOI: 10.5281/zenodo.6622683

**ஆய்வுச்சுருக்கம்**

*இலக்கியங்கள் தங்கள் வளர்ச்சியில் பல்வேறு வடிவ மாற்றங்களை அடைந்தாலும், இயற்கையை புகழ்தல், வாழ்த்துதலை மாற்றிக் கொள்ள எண்ணுவதே இல்லை. அவற்றின் சாராம்சமாக தபூசங்கர் எனது கறப்புப் பெட்டி என்ற நூலில் தமது மாறுபட்ட இயற்கை பதிவுகளை குறிப்பிட்டுள்ளார். இயற்கையோடு பேசுவதாகவும் இயற்கையே பேசுவதாகவும் என தமது கற்பனை வளத்தில் புதுமைப்படைக்கிறது. மாறுபட்ட இயற்கை பற்றி சிந்தனையை உற்று நோக்குவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.*

**திறவுச்சொற்கள்:** இயற்கை, இயற்கை பேசுதல், தபூசங்கர், கவிதைகள்.

**முன்னுரை**

விதையின் வளர்ச்சியாய் தோற்றமளிக்கும் மரம் போல, படைப்புகளின் வளர்ச்சியாய் இலக்கியங்கள் தோன்றியது. பரந்து விரியும் கிளைகள் போன்று பல்வேறு இலக்கிய வகைகள் வளர்ந்து வருகிறது. தற்காலத்தில் அவற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுவது புதுக்கவிதை (அ) ஹைக்கூ எனலாம். அத்தகைய வளர்ச்சியின் வரிசையில் கவிஞர் தபூசங்கர் என்பவரின் “எனது கறுப்புப்பெட்டி” என்னும் கவிதை தொகுப்பு மாறுபட்ட எண்ணவோட்டத்தை கவிதைகளாகப் பதிவு செய்கிறது. இவை மனஅடிவாரம், மனச்சரகம், மனச்சரிவு என்னும் மூன்று பிரிவுகளில் ஹைக்கூ கவிதைகள் குறிப்பிடும் இயற்கை சார் செய்திகளை இவ்வாய்வுக் கட்டுரை வழி அறியலாம்.

**பூக்கள்**

அழகான பூ ஒன்றை கவிஞர் பறிக்கிறார் பின்னர் அதனை என்ன செய்வது என்று சிந்திக்கிறார்? ஆதலால் அவரால் பறிக்கப்பட்ட பூ அழகற்று போய்விட்டது என்கிறார். **“அதுதான் நான் பறித்த கடைசிப் பூ” (எ.க.பெ –பக்:6)** இத்தகைய நிகழ்வினால் கவிஞர் இனி பூக்களை பறிப்பதில்லை என்ற முடிவிற்கு வருகிறார்.

**“வெளுத்துப் போகின்றன**
**பிளாஸ்டிக் பூக்கள்” (எ.க.பெ –பக்:37)**

பூக்கள் வாடும் தன்மையுடையன. ஆனால் பிளாஸ்டிக் பூக்கள் வாடாது. எனவே செயற்கையாக உருவாக்கப்படும் பூக்கள் வாடும் தன்மையில்லாததால் கவலையில் வெளுத்துப் போகிறது. என்ற கருத்தை கவிஞர் குறிப்பிடுகிறார். பூக்கள் பற்றிய சிந்தனையை கவிஞர் விக்கிரமாதித்தன்

எடுத்துரைக்கையில் பூக்கள் பூப்பது வசந்த காலத்தின் அறிகுறி என குறிப்பிடுகிறார். பூக்கள் மலர்தல் மற்றும் உதிர்தல் கவிஞனின் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை அறியமுடிகிறது.

**மணல் பரப்பு**

ஆற்றோரத்தில் உள்ள ஈரமணலில் பாதம் பதிந்திருப்பதைக் கண்டு அதனை விட்டு வீட்டிற்கு கிளம்பும் மனம் கவிஞருக்கு வரவில்லை என தனது மனத்தின் எண்ணத்தை பாதசுவடுகளாக்கி விட்டுவர மனம் இன்றி துடிப்பவராய் சித்தரிக்கிறார். பாரதிதாசன் அழகின் சிரிப்பு என்னும் நூலில்,

**"ஊருக்கு கிழக்கே உள்ள**
**பெருங்கடல் ஓரமெல்லாம்**
**கீரியின் உடல் வண்ணம் போல்**
**மணல் மொத்தை" (அழ. சிரி. கடல் ப: 6)**

கடற்பகுதியில் உள்ள மணற்மேட்டினை கவிதையின் கருப்பொருளாக கையாளுவதை காணமுடிகிறது.

**மரம்**

தாம் ஒதுங்கி நின்ற மரத்தின் நிழல் தன் மீதே இளைப்பாறுவதை **"என் மீது இளைப்பாறி கொண்டிருந்தென்பது" (எ.க.செ –ப: 8)** எனும் கவிதை வழி கவிஞரின் மாறுபட்ட கற்பனை வளத்தை அறியமுடிகிறது. மூங்கில் இலையில் படிந்த மழைநீர் வடிகிறது. இதனை கவிஞர் கண்டு இரசிக்கிறார். இறுதியாக வடிந்து வந்த அந்த துளியும் கீழே விழுவதைக் கண்டு வருத்தம் கொள்ளும் ஆசிரியரின் இயற்கை பற்றிய ரசனை கவிதையை மேலும் அழகுபடுத்துகிறது. மரத்தை வெட்டும் மனிதனுக்காக அவை தனது பிராணவாயுவை விட்டுச் செல்கின்றன. மரம் மனிதனுக்காக தமது இறுதிநிலை வரை பயன் தரும் என்பதை எடுத்துரைப்பதாக **"அந்த மனிதனே சுவாசிக்கட்டும்" (எ.க.செ –ப: 18)** என்ற கவிதை அமைகிறது

**சூரியனும், நிலவும்**

நிலவும் நட்சத்திரமும் அம்மாவாசை நான் பற்றி உரையாடுகின்றன. நிலவைப்பார்த்து சோறூட்டும் தாய்மார்கள் அம்மாவாசை போது என்னசெய்வார்கள் என்று நிலவு கேட்க. அன்று உன்னை வசைப்பாடுகின்றனர் எனவே நீ அம்மாவசை என்கிறது.

**"உன்னைப் பற்றிய கவிதைகளில்**
**உனக்குப் பிடித்தது எது" (எ.க.செ –ப: 21)**

என கேட்க தனக்கு எதுவும் பிடிக்கவில்லை ஏனெனில் எந்த கவிதையும் தனக்கு சொந்த வெளிச்சம் தர முடியுமா? என கேள்வி எழுப்புகிறது. இரவில் வரும் நிலவு வயலின் நடுவே உள்ள கிணற்றில் பிரதிப்பலிக்கிறது. தொலைவிலிருந்தாலும் குழந்தைகள் நிலவை பார்த்தால் சாப்பிடும் என்பது அன்னையர்களின் கருத்து. ஆனால் அறிவியல் ஏற்றுக்கொள்கின்ற நிலா பற்றிய செய்தியை கவிஞர் தம் கற்பனையால் மறுக்க முயல்கிறார்.

**"தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்**
**மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்**
**அறியோதோரையும் அறியக் காட்டித்**
**திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து" (புறம் : 27 : 11-14)**

எனும் புறநானூற்று பாடல் வரிகள் நலங்கிள்ளி அரசனின் பெருமையை குறிப்பிடும் பொருட்டு பிறத்தல், இறத்தல் போன்ற உண்மையை உலகிற்கு உணர்த்தவே திங்கள் என்னும் தெய்வம் தேய்வதும்,

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

வளர்வதும், மறைவதும், எழுவதுமாக வானத்தில் வலம் வருகிறது என நிலவின் சிறப்பு எடுத்துரைக்கிறது. சூரியன், நதி, காடு, பசு, நிலா என அனைத்தும் தங்களது எண்ணத்தினை வெளிப்படுத்தும் கவிதை கவிஞன் இயற்கை மீது கொண்ட அன்பை வெளிப்படுவதாக அமைகிறது.

**வெள்ளம்**

அத்துமீறல் என்ற சொல்லே துன்பத்தை குறிப்பதாகும் நமது விருப்பத்திற்கு அப்பாற்பட்ட ஒன்று நமது வாழ்வில் நிகழ்கிறதென்றால் அத்தகைய நிலை துன்பத்தை உருவாக்கும் அப்படி ஒரு நிகழ்வை தான் இக்கவிதை வரிகள் குறிப்பிடுகின்றன.

**“ஈரமில்லாத வெள்ளம்**
**அடித்துப் போகிறது**
**ஏழைக் குடிசையை” (எ.க.பெ –ப: 41)**

வெள்ளம் பற்றிய கவிதையை குறிப்பிடுகையில் ஏழையின் குடிசையை வெள்ளம் அடித்துப் போகிறது என வெள்ளத்தால் ஏற்படும் துன்பத்தை குறிப்பிடுகிறார். ஏழையின் வறுமையை அறியாத வெள்ளத்தை ஈரமில்லாத வெள்ளம் எனக் குறிப்பிடுகிறார்.

**நிறைவுரை**

கவிஞர் தபூசங்கர் தமது படைப்புகளால் இவ்வுலகை புதுமையாக படைக்கிறார். மனதில் ஏற்பட்ட பதிவுகளை வரிவடிவாக்கி நமது சிந்தனையில் முத்திரையாக்குகிறார். மனிதன் எண்ண அலைகளால் இயற்கைக்கு பேசும் தன்மை தந்து நியதி உரைக்கிறார். மனதின் எண்ணத்தை எளிமையாக இதயத்தில் பதியச் செய்கிறார். அவரது எண்ணங்கள் சில முரண்பட்டவையாயினும் கற்பனையால் ஏற்பதில் தவறொன்றும் இல்லை இயற்கையை நேசித்து, துன்பத்திற்கு இடம் தந்து, இன்பம் உருவாக்கி மகிழவழிச் சொல்கிறார் கவிஞர் பேசும் நதியும், புலம்பும் சூரியனும், எச்சரிக்கும் வண்டுகளும் கதறும் வரைபடமும், வாழ்வின் புதிய சிந்தனையை சிதைக்காமல் நிற்கிறது. கற்பனை எண்ணத்திலாவது இயற்கை புலம்பல் அறிந்து இயற்கை காப்போம்! இன்பம் பெறுவோம்!

**துணைநூற்பட்டியல்**

[1] ஆரோக்கிய சாமி.இரா. *புறநானூறு*, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி)லிட், சென்னை - 6000 098, 2007.
[2] தபூசங்கர். *எனது கறுப்புப் பெட்டி*, விஜயா பதிப்பகம், கோயமுத்தூர், 2000.
[3] பாரதிதாசன். *அழகின் சிரிப்பு*, Free Tamil Ebook.com
[4] விக்ரமாதித்யன். *சுடலைமாடன் வரை*. சந்தியா பதிப்பகம், சென்னை - 600 083, 2003.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.